மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
ஆத்தூர்
முன்னிலை: திரு.S. அன்புதாசன், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்
**2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாள் திங்கள்கிழமை**
பழைய அ.வ.எண். 81/2019

புதிய அசல்வழக்கு எண். 55/2023
**in**
**CNR.NO.TNDG18-000694-2023**

சண்முகராஜா .... வாதி

- எதிர்-

1. கணேசன்
2. உயர்திரு வட்டார வளர்ச்சி அலுவலர்
   அ.புதுார்.
3. எழுத்தர், அய்யங்கோட்டை ஊராட்சி,
4. உயர்திரு. செயற்பொறியாளர் அவர்கள்,
   வத்தலக்குண்டு.
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   திண்டுக்கல். ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.81/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வந்த நிலையில், நீதிமன்ற அதிகார வரம்பெல்லை காரணமாக மேற்படி வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அ.வ.எண்.55/2023 ஆக 22.07.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.திருமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.பா.பாபு மற்றும் நா.தங்கபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், பின்னிட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர் என்று உத்தரவிடப்பட்டுள்ளார். 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு குறிப்பாணையை தாக்கல் செய்துள்ளார். 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.K.ராணி அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியும் , பின்னிட்டு வாதி, பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகி வாதவுரையை மேற்கொள்ளாததால், சாட்சிய, சான்றாவணங்களையும், வழக்கு கோப்பினைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தினை 1ம் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ எந்தவித தடையோ இடையூரோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், கடந்த 08.07.2019ம் தேதி முறையான விசாரணையின்றி இவ்வழக்கு 2–ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவினை சட்டப்படி செல்லதக்கதல்ல என விளம்புகை செய்யும்படிக்கும் மற்றும் 3–ம் பிரதிவாதியால் இவ்வழக்கு 1–ம் பிரதிவாதியால் வீட்டு வரிரசீது ஏதும் ஏற்படுத்தக்கூடாது என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், இவ்வழக்கு சொத்தில் வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பினை முறையான விசாரணையின்றி 4–ம் பிரதிவாதி துண்டிக்கக்கூடாது என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், வழக்கின் செலவு தொகையினை வாதிக்கு, 1ம் பிரதிவாதி கொடுக்கும்படிக்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு.

1) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:–

இவ்வழக்கு சொத்துக்கள் ஆதியில் வாதியின் தந்தை வழி பாட்டியான பாவாயி என்ற பகவாயி அம்மாளுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்தாகும். அதனை கடந்த 22.07.1970–ம் வருடம் R. பாஸ்கர் அவர்களிடமிருந்து கிரையம் பெற்று அவரது பெயருக்கு பட்டா, வரி ரசீது ஏற்படுத்தி அனுபவம் செய்து வந்தார்.

இந்நிலையில் வாதியின் தந்தை வழி பாட்டியான பாவாயி என்ற பகவாயி அம்மாள் அவர்கள் அனுபவம் செய்து வந்த நிலையில், இவ்வழக்கு சொத்து மற்றும் ஒரு சொத்தினையும் சேர்த்து அவர்களால் கடந்த 20.08.2003–ம் தேதி ஒரு தான பத்திரம் மூலம் வாதிக்கு தானம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தானப்பத்திரம் அய்யம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 23/2003–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாவாயி என்ற பகவாயி அம்மாள் கடந்த 2003–ம் வருடம் காலமாகிவிட்டார்.

வாதி தனக்கு தானமாக கிடைத்த 1890 ச.அடி சொத்தில் அமைந்திருந்த ஓட்டிடை வீட்டினை அனுபவம் செய்து வந்து, அதன் பின் அதனை அப்புறப்படுத்தி புதிதாக சுமார் 629 ச.அடியில் கான்கிரீட் வீடு கட்டி அதற்கு மின் இணைப்பு பெற்று, வரி வகையறா செலுத்தி இன்றைய தேதி வரை அனுபவம் செய்து வருகிறார்.

இவ்வழக்கு 1–ம் பிரதிவாதி, இவ்வழக்கு சொத்து ஏதோ அவருக்கு பாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், அது அவருக்கு பாத்தியம் என்றும் அ.வா.எண்.241/2004–ன் கீழ் உத்தரவு பெற்றுள்ளதாகத் தெரிவித்து, இவ்வழக்கு வாதியின் அனுபவத்தினை இடையூறு செய்ய எத்தனித்து வருகிறார். வாதி தனக்கு தானம் கிடைத்த தேதியிலிருந்து, செலுத்தி வந்த வீட்டு வரி ரசீதினை ரத்து செய்யும்படி, 1–ம் பிரதிவாதி கடந்த 03.06.2019–ம் தேதி மனு செய்து, அது சரியாக விசாரணை செய்யாமல், கடந்த 08.07.2019–ம் தேதி வாதி செலுத்தி வந்த

வரி ரசீது ரத்து செய்யப்பட்டுள்ளதாக, இவ்வழக்கு 2–ம் பிரதிவாதியால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 2–ம் பிரதிவாதி கடந்த 08.07.2019–ம் தேதி வழங்கிய உத்தரவில் உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 241/2004–ல் உத்தரவு வழங்கியுள்ளதாகவும், அதன்படி வரி ரசீதுகளை ரத்து செய்வதாகவும் தெரிவித்துள்ளது. உண்மையில், அ.வ.எண்.241/2004–ல் இவ்வழக்கு வாதி ஒரு தரப்பினரே கிடையாது. மேற்படி வழக்கானது 1–ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரரும், இவ்வழக்கு வாதியின் தந்தைக்கும் இடையே நடந்த வழக்காகும். மேற்படி வழக்கானது கடந்த 19.02.1974–ம் வருடம் பாகவிஸ்தி பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமாக நடைபெற்ற வழக்காகும். இந்நிலையில் 19.02.1974–ம் வருட பாகவிஸ்தி பத்திரத்தில் இவ்வழக்கு சொத்து சர்வே எண். 1748/1 சம்பந்தமாக ஏதும் குறிப்பிடப்படவில்லை. இவ்வழக்கு சொத்து பாகவிஸ்திக்குள் உட்படுத்தப்படவில்லை. வாதியின் தந்தை வழி பாட்டியுமான பாவாயி என்ற பகவாயி அம்மாள் அவர்களுக்கு கிரையம் மூலம் தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும். அதனை அவர் தன் வாழ்நாளில் எந்த வில்லங்கத்துக்கும் உட்படுத்தாமல் சர்வ சுதந்திரமாக அனுபவம் செய்து வந்து இவ்வழக்கு வாதிக்கு தானம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் தனக்கு தானம் கிடைத்த தேதியிலிருந்து இவ்வழக்கு சொத்தினை சட்ட கால அளவு வரை இவ்வழக்கு வாதி அனுபவம் செய்து அதில் கட்டிடம் கட்டி குடியிருந்து வருகிறார். மேலும் கட்டிடம் கட்டும்போது எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காத 1–ம் பிரதிவாதி தற்போது வரி ரசீதை ரத்து செய்யும்படிக்கும் மனு செய்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. மேலும், 1–ம் பிரதிவாதி குறிப்பிடும் சிவில் வழக்கில் வாதிக்கு எதிராக எந்த உத்தரவும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் உரிய ஆவணங்கள் பார்வையிடாமல், முழுமையான விசாரணை இல்லாமல் 2–ம் பிரதிவாதி கடந்த 08.07.2019–ம் தேதி வழங்கிய உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்றும், மேலும் 3–ம் பிரதிவாதி உரிய விசாரணையின்றி 1–ம் பிரதிவாதி பெயருக்கு வழக்கு சொத்திற்கு வீட்டுவரி ரசீது வழங்கக்கூடாது என்றும், அதே போல் 4–ம் பிரதிவாதி முறையான விசாரணையின்றி வழக்கு சொத்தில் அமைந்துள்ள வீட்டில் கண்டுள்ள மின் இணைப்பினை துண்டிக்கக்கூடாது என்ற பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி தமிழ்நாடு மின்வாரியத்தில் ஊழியராக வேலை செய்து ஓய்வு பெற்ற அதிகாரியாவார். அவருடைய பழக்கத்தை வைத்து மின் இணைப்பை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாலும், மேலும் 2–ம் பிரதிவாதியால் கடந்த 08.07.2019–ம் தேதி தவறான வகையில் வழங்கப்பட்ட உத்தரவினை வைத்து 1–ம் பிரதிவாதி, 3–ம் பிரதிவாதி மூலம் தனது பெயருக்கு ரசீது பெறும் நடவடிக்கை உள்ளதாலும், மேலும் 1–ம் பிரதிவாதி கடந்த 10.07.2019–ம் தேதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய எத்தனித்ததாலும், அது சம்பந்தமாக காவல்துறையில் வாதியால் புகார் கொடுக்கப்பட்டு சிவில் வியாஜ்ஜியம் என்பதால் நீதிமன்றம் தீர்வு காணும்படி அறிவுறுத்தியதால் பிரதிவாதியின் நடவடிக்கையினை சமூகம் நீதிமன்றம் மூலமே தடுத்து நிறுத்த முடியும் என்பதால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்</u>

வாதியின் தாவா பிராதில் உள்ள சங்கதிகளில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்.

வாதியின் தாவா பிராது பாரா 4–ல், தாவா சொத்து ஆதியில் 1–ம் பிரதிவாதியின் தாயாரான பகவாயி அம்மாளுக்கு, அவர் 22.07.1970–ம் தேதியில்

ஒரு ஆர்.பாஸ்கர் என்பவரிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்பது மட்டுமே உண்மை என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. வாதியின் தாவா பிராது பாரா 5–ல் தாவா சொத்தையும் வேறு சொத்தையும் சேர்த்து பகவாயி அம்மாள் தாவா வாதிக்கு தானமாக கொடுத்தார் என்பது மறுக்கப்படுகிறது.

தாவா பிராது பாரா 7–ல் தாவா வாதி பெயரில் ஏற்பட்டிருந்த வீட்டு வரி ரசீது பிரதிவாதியின் முறையான மனுவின் பேரில் நடைபெற்ற விசாரணையின் பேரில் தாவா 2ம் பிரதிவாதியால் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்பது உண்மை என்று பிரதிவாதியால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. மாறாக வீட்டுவரி இரத்து செய்யப்பட்ட 2–ம்பிரதிவாதியின் நடவடிக்கை முறையான விசாரணை ஏதும் செய்யப்படாமல் இரத்துச் செய்யப்பட்டதாக கூறியுள்ளதை பிரதிவாதி மறுக்கிறார்.

வாதியின் தாவா பிராது பாராக்கள் 6, 8, 9, 10, 11 மற்றும் 12–ல் கூறியுள்ள சங்கதிகளை பிரதிவாதி முற்றிலுமாக மறுக்கிறார்.

உண்மையில் தாவா சொத்து மற்றும் வேறு சொத்தும் கடந்த 1978–ல் நடந்த வாய்க்கரால் பாகப்படி பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்கள். அதுகுறித்து தாவா சொத்தும் வேறு சொத்தும் பிரதிவாதிக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டவை என்று விளம்புகை பரிகாரம் கோரி சமூகம் நிலக்கோட்டை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் இந்த நிர் பிரதிவாதியால் அவரது சகோதரரரான வாதியின் தகப்பனாரான மூக்கையா மற்றும் மேற்படியார்களது தகப்பனாரான மொட்டையாண்டி ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு அ.வ.எண்.241/2004 நிர் வழக்கு கடந்த 24.04.2006–ம் தேதி பிரதிவாதிக்கு ஆதராவாக தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பிற்கு எதிராக தாவா வாதியின் தகப்பனாரான மூக்கையா தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கான மே.மு.வ.எண்.135/2007 நிர் வழக்கிலும் கடந்த 11.08.2010–ம் தேதி பிரதிவாதிக்கு சாதகாமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இரு தீர்ப்புரைகளையும் படித்துப் பார்த்தாலேயே அவை வாதியையும் கட்டுப்படுத்தி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புகள் என்பது நன்கு தெரியவரும். மேலும் அ.வ.எண்.241/2004–ல், தாவா வாதியால் பிராதில் கூறப்பட்டுள்ள 20.08.2003–ம் தேதிய தானசெட்டில்மென்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டு அதுகுறித்தும் "பி.வா.சா.ஆ.1 ஆன தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது" என்று அ.வ.எண்.241/2004–ல் சமூகம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நிலக்கோட்டையால் குறிப்பாக குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாஅசல் வழக்கே சட்டத்தின்படி நிலை நிறுத்தத்தக்கது அல்ல. உண்மை நிலை இவ்வாறிருக்க மேற்படி வழக்கில் தன்னை கட்டுப்படுத்தி தீர்ப்புகள் வழங்கப்படாதது போலவும் அதனால் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி செய்யப்பட தீர்ப்பு தன்னைக் கட்டுப்படுத்தாது என்பது போலவும் பிரலாபித்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா அசல் வழக்கும் இந்த காரணத்திற்காகவே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது.

10.07.2019–ம் தேதி தாவா சொத்திற்குள் பிரதிவாதி அத்துமீறி நுழைய எத்தனித்ததாக வாதியால் பிரலாபிக்கப்பட்டிருப்பது இந்த வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட போலியான வாதமாகும்.

தாவா சொத்து 1 –ம் பிரதிவாதிக்கு 1978–ல் நடந்த வாய்க்கரால் பாகப்படி பாத்தியப்பட்டதும், அவ்வாறே 1–ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனித்துப் பாத்தியப்பட்டது என்று நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டு, அதனையே சமூகம் திண்டுக்கல் முதன்மை சார்புநீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டுள்ளதுமான சொத்தாகும்.

தாவா சொத்தில் உள்ள தாவா வீட்டிற்கு வாதியே வீட்டு வரி செலுத்திவருவதாக கூறுவது பிரதிவாதியால் மறுக்கப்படுகின்றது. வாதியால்

தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா அசல் வழக்கும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்படாத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது.தாவா வழக்கின் சொத்துவிபரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துவிபரம் அதன் உண்மையான அளவு மற்றும் அமைப்பைக் காட்டக்கூடியதாய் இல்லை. வாதியின் தாவா அசல் வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 3ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்

5–ம் பிரதிவாதி தனது அரசு உயரதிகாரி ஆவார். 2 மற்றும் 4 ம் பிரதிவாதி அரசின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும் பிராதில் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டிய ஒன்றாகும். நீதிமன்றத்திற்கு உரிய கட்டணம் செலுத்தவில்லை.

மேலும் வழக்கின் சொத்து என கூறப்படும், அய்யம்பாளையம் கிராமம் அய்யன்கோட்டை பஞ்சாயத்து, வார்டு எண் 4, அ.புதூரில் நத்தம் சர்வே எண் 1748/1ல் கட்டுப்பட்ட வடக்குத் தெருவில் கதவு எண் 3/8 ல் உள்ள கிழமேல் 45, தென்வடல் 42 ஆக 1890 சதுரடி அளவுள்ள வீடு என காட்டப்பட்டுள்ளதை வாதியே ஆதாரத்துடன் நிருபிக்க வேண்டும்.

வாதி பிராது 3 முதல் 6 பாராவில் கூறியுள்ள சங்கதிகளை வாதியே ஆதாரத்துடன் நிருபிக்க வேண்டும். மேலும் பிராது சொத்து சர்வே எண்: 1748/1 கட்டுப்பட்ட வடக்குதெரு அமைந்துள்ள களண்: 3/8 என்றும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று இது தனக்கு கடந்த 20–10–2003–ல் பாவய்யாம்மாள் என்ற பகவாய்யாம்மாள் என்பவர் வாதிக்கு தானம் கொடுக்கபட்டது என்றும், இதன் அடிப்படையில் வாதி அய்யங்கோட்டை ஊராட்சி தலைவரிடம் 2016–17 ஆண்டில் வீட்டு வரி ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும், 3–ம் பிரதிவாதி

தெரிவிக்கிறார். ஆனால் வழக்கின் சொத்து 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், இதற்கு ஆதரவாக நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கின் எண் O.S.NO: 241/2004–ல் கடந்த 24/4/2006–ல், மேலும் மேல் முறையிடு என் A.S NO: 135/2007–ல் கடந்த 11/10/2010–ல் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் வழங்கின் சொத்து 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேலும் 1–ம் பிரதிவாதிக்கு வழக்கின் சொத்து பாத்தியப்பட்டது என்று 2–ம் பிரதிவாதிக்கு புகார் கொடுத்ததின் அடிப்படையில், உரிய விசாரனைக்கு பின்னிட்டு வழக்கின் சொத்தானது நத்தம் சர்வே எண்: 1748/1–ல் களண் 3/8 மற்றும் 3/5, 1–ம் பிரதிவாதியான கணேசனுக்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வந்ததால், வாதி பேரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது கடந்த 8/7/2019–ல் ரத்துசெய்து, 1–ம் பிரதிவாதியின் பெயரில் வீட்டு வரி ரசீது வழங்க உத்தரவுவிடபட்டது என 3–ம் பிரதிவாதி தெரிவிக்கிறார்.

ஆகாயல் வாதி தவறான ரசீது பயன்படுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த உரிமை கிடையாது. வாதிக்கு கோரும் எந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. ஆகையால் 3–ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு, 3–ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>4ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்</u>**

**5–**ம் பிரதிவாதி எனது அரசு உயரதிகாரி ஆவார். **2** மற்றும்**–3–**ம் பிரதிவாதி அரசின் கீழ் பணிபுரிந்து வருகிராார்கள்

மேலும் பிராதில் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டிய ஒன்றாகும்.

மேலும் வழக்கின் சொத்து என கூறப்படும், அய்யம்பாளையம் கிராமம் அய்யன்கோட்டை பஞ்சாயத்து, வார்டு எண் 4. அ.புதூரில் நத்தம் சர்வே எண் 1748/1ல் கட்டுப்பட்ட வடக்குத் தெருவில் கதவு எண்.3/8 ல் உள்ள கிழமேல் 45, தென்வடல் 42 ஆக 1890 சதுரடி அளவுள்ள வீடு என காட்டப்பட்டுள்ளதை வாதியே ஆதாரத்துடன் நிருபிக்க வேண்டும்.

ஆனால் வாதி கிராமம்/கிழக்கு/வத்தலக்குண்டு பிரிவுக்குட்பட்ட மின் இனைப்பு 244-002-1004 TF IA 0 dt 3-1-2014 முதல் களன் 8/3 அய்யன்கோட்டை புதூரில் வாதி பெயரில் அய்யன் கோட்டை பஞ்சாயத்தாள் வழங்கப்பட்ட ரசீதின் அடிப்படையில் மின் இனைப்பு வழங்கப்பட்டு இன்றுவரை பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இந்த மின் இணைப்பு உள்ள வீட்டின் மீது திரு.மொ.கணேசன் என்பவர் அ.புதூரில் வடக்குதெருவில் கதவு எண் 5/3 மற்றும் 8/3 சம்பந்தமாக, நிலைகோட்டை உரிமை நீதிமன்றத்தில் OS No: 241/04-ன் படி வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், அதனால் வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பு வேண்டி 4-ஆம் பிரதிவாதியிடம் கடந்த 5-5-2016-ல் மனு கொடுக்கப்பட்டது .

இந்த புகாரின் அடிப்படையில் இருதரப்பினருக்கும் வழக்கின் சொத்தில் உள்ள வீடு தங்களுக்கு பாத்தியபட்டது என்பதற்காக தகுந்த ஆவணங்களை 15 நாட்களுக்குள் தாக்கல் செய்யும்படிக்கும், வாதி மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், இதில் 1-ம் பிரதிவாதி கடந்த 16.11.16-ல் அய்யன்கோட்டை ஊராட்சி தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட 2004-2005, 2007-2008, 2008-2009, 2010-2011 2016-2017 ஆண்டுகளுக்குரிய வீட்டுவரி இரசீது மற்றும் பாகவிஸ்தி பத்திரம் இதர வருவாய் ஆவணங்கள் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் வாதி எந்த பதிலும் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

கடந்த 23-7-2019அன்று 1-ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் வாதியின் பெயரில் வழங்கப்பட்ட இரசீது, கடந்த 8/7/2019-ல் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அனுப்பிய ந.க.எண் 3548/2019/பி2 dt 8/7/2019-ன்படி வாதியின் பெயரில் வழங்கிய ரசீது ரத்து செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார்.

ஆகையால், TNEB 1 விண்ணப்பத்தில் மின் இணைப்பு பெறும் மனுதாரரால் அளிக்கப்பட்ட உறுதிமொழி விண்ணப்பம் பாரா 12படி மனுவில் மேல் குறிப்பிட்டுள்ள விபரங்கள் மனுதாரரால் உன்மையெ்ன உரிகூரி, மின் இணைப்பு கொடுக்கும்போதோ, அதற்கு அடுத்து ஏதேனும் தவறானது என தெரியவந்தால் மின் இணைப்பு எவ்வித முன் அறிவிப்பின்றி துண்டிக்கப்படுவதோடு, அன்று மின் வாரியத்துக்கு அந்தந்த நேரத்திற்கு நிர்ணயிக்கும் இழப்பிற்கு உரிமைகோரப்படுவதற்கும் பிரதிவாதிக்கு உரிமையில் வழக்கு தொடர பிரதிவாதிக்கு உரிமை உண்டு .

ஆகையால் வாதி தவறான ரசீது பயன்படுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த உரிமை கிடையாது வாதிக்கு கோரும் எந்த பரிகாரம் கிடைக்கதக்கதல்ல.

**3) <u>வாதியின் பிராது மற்றும் பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கடந்த 21.07.2025 அன்று கீழ்க்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-</u>**

1. வாதியின் இவ்வழக்கானது காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?

2. இவ்வழக்கானது முன்தீர்ப்புத்தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதா?

3. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால் வாதியின் இவ்வழக்கு சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளதா?

4. வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் சொத்துவிபரம் மற்றும் விஸ்தீரணம் சரியானதா?

5. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்பது உண்மைதானா?

6. தாவா தேதியில், தாவா சொத்தின் சட்டப்படியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும், வாதி இருந்து வருகிறார் என்பது உண்மைதானா?

7. வாதி இவ்வழக்கில் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதா?

8. வாதி இவ்வழக்கில் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கதக்கதா?

9. வாதி இவ்வழக்கில் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு சட்டப்படி கிடைக்கதக்கதா?

10. இதர பரிகாரங்கள் யாவை?

4) வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1ஆக வாதி சண்முகராஜா என்பவர் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 ஆக பரந்தாமன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

## 5) <u>எழுவினாக்கள்</u>

### <u>எழுவினா 1க்கான தீர்வு</u>

**1. வாதியின் இவ்வழக்கானது காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?**

வாதி தன்னுடைய வழக்குரையில், **08.07.2019–ம்** தேதி **2ம்** பிரதிவாதி வழங்கிய உத்தரவை சட்டப்படி செல்லதக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம்

கோரி இந்த வழக்கை 3 ஆண்டுகளுக்குள் 23.04.2021–ம் தேதி தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கானது காலவரையறைச்சட்டம் சரத்து 58–ன் கீழ் சட்டப்படி பாதிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில், வாதியின் இவ்வழக்கானது காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ள நிலையில், எவ்வாறு இவ்வழக்கு காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்பது குறித்து வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணையின் மூலம் சட்டத்திற்குட்பட்டு முரண்படுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே, வாதியின் இவ்வழக்கானது காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்று வாதி தரப்பு ஆவணங்களை பார்க்கும்போது, இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எனவே, எழுவினா.1க்கு வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கிறது.**

**<u>எழுவினா 2க்கான தீர்வு</u>**

**2. இவ்வழக்கானது முன்தீர்ப்புத்தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதா?**

இவ்வழக்கானது முன்தீர்ப்புத்தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்று 1ம் பிரதிவாதி தான் தன்னுடைய எதிர்வழக்குரையில் கூறியுள்ளார். எனவே, 1ம் பிரதிவாதி தான் இவ்வழக்கு முன்தீர்ப்புத்தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்க கடமைப்பட்டவராவார். 1ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 241/2004 வழக்கில் கடந்த 24.04.2006–ம் தேதியன்று தாவா சொத்து மற்றும் வேறு சொத்துக்கள் இந்த 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே வாய்க்கரால் பாகப்படி தனித்து பாத்தியபட்டது என்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக

வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனை எதிர்த்து வாதியின் தந்தை தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு எண். 135/2007 கடந்த 11.08.2010-ம் தேதி இந்த 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். மேற்படி அசல் வழக்கு எண். 241/2004 வழக்கில் வாதியின் தந்தை பிரதிவாதியாக இருந்துள்ளார் என்றும், மேலும், அந்த வழக்கிலேயே, இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள 20.08.2003-ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டு, மேற்சொன்ன தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்புடையதல்ல என்று அந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்று கூறியுள்ளார். வாதி மேற்சொன்ன அசல் வழக்கு எண். 241/2004ல் ஒரு தரப்பினர் இல்லை என்று கூறப்பட்டிருந்தாலும், இந்த வழக்கின் சர்வே எண் மற்றும் இந்த வழக்கில் சொல்லப்பட்ட 20.08.2003-ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்தும் Subject Matter of the Suit ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதை உறுதி செய்யும் விதத்தில் அசல் வழக்கு எண்.241/2004 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையையும், மேல்முறையீட்டு வழக்கு எண். 135/2007 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகளை இவ்வழக்கில் தாக்கல் செய்து, தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் வாதியின் இவ்வழக்கானது முன்தீர்ப்புத்தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்று 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள கூற்றை இந்நீதிமன்றத்தின் முன்பு தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எனவே எழுவினா.2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.**

**<u>எழுவினா 3க்கான தீர்வு</u>**

| |
|---|
| 3. **விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே** |

**கோரியுள்ளதால் வாதியின் இவ்வழக்கு சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளதா?**

1ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில், தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்றும், ஏற்கனவே நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண். 241/2004 வழக்கில் கடந்த 24.04.2006 அன்று தாவா சொத்து மற்றும் வேறு சொத்தும் 1978–ல் நடந்த வாய்க்கரால் பாகப்படி, இந்த 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்துக்கள் என்றும், தாவா சொத்தும், வேறு சொத்துக்களும் 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியபட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றும், அந்த தீர்ப்புக்கு எதிராக வாதியின் தந்தை செய்த மேல்முறையீட்டு வழக்கான AS.No.135/2007 வழக்கிலும், கடந்த 11.08.2010–ம் தேதி இந்த 1ம் பிரதிவாதிக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் 1ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் மேற்சொன்ன அசல் வழக்கு எண்.241/2004 வழக்கில், இந்த வழக்கில் வாதியால் சொல்லப்பட்டுள்ள 20.08.2003 தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டு, அந்த பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்புடையதல்ல என்று நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்து விட்டது என்று தாவா சொத்தின் உரிமைமூலம் ஏற்கனவே நீதிமன்றத்தால் 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்று நிச்சயதன்மையுடன் எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமைமூலத்தை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில், 1ம் பிரதிவாதி பின்னிட்டு இவ்வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை என்றாலும், வாதிக்கு தாவா சொத்திலுள்ள உரிமை மூலத்தை அசல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்களை சொல்லியும், தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து நீதிமன்றம் தீர்மானித்துள்ளதை நிச்சயதன்மையுடன் எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி

கூறியுள்ளதற்கு பின்னிட்டு, வாதி தாவா சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை பரிகாரத்தை சட்டப்படி இந்த வழக்கில் கேட்டு வழக்குரையை திருத்தம் செய்திருக்க வேண்டும். வழக்கு சொத்தில் வாதியின் உரிமைமூலத்தை நிச்சயதன்மையுடன் எதிர்வழக்குரை மூலம் மறுத்ததற்கு பின்னிட்டு, தாவா சொத்தின் மீது வாதி இவ்வழக்குரையில் உரிமை விளம்புகை பரிகாரத்தை கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான **Anathula Sudhakar Vs Buchi Reddy(Dead) By Lrs & Ors Dt.25.03.2008** என்ற முன்தீர்ப்பின் மூலம் வாதியின் இவ்வழக்குரையானது சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும், 2ம் பிரதிவாதி தன்னுடைய 08.07.2019–ம் தேதிய உத்தரவிலும், நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையிலும், உரிமை ஆவணங்களின் அடிப்படையிலும், விசாரணை மேற்கொண்டதில் நத்தம் சர்வே எண்.1748/1–ல் அமைந்துள்ள 3/5, 3/8 கதவு இலக்க எண் உள்ள வீடு மொ.கணேசன், த/பெ. மொட்டையாண்டி என்பவருக்கு சொந்தமானது என தெரிய வருகிறது. எனவே, வாதிக்கு வழங்கிய வீட்டு வரி ரசீது ரத்து செய்து விட்டு 1ம் பிரதிவாதி பெயருக்கு ரசீது வழங்க உத்தரவிட்டதை பார்க்கும்போது, அந்த உத்தரவு சட்டப்படி செல்லாதது என்று மட்டும் வாதி விளம்புகை பரிகாரம் இந்த வழக்கில் கோரியிருந்தாலும், தாவா சொத்து சர்வே எண்ணில் வாதிக்கான உரிமைமூலம் இல்லை என்று நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் முடிவு செய்வதாக வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி உத்தரவிட்ட நிலையில், இவ்வழக்கை வாதி தாக்கல் செய்யும்போதோ, அல்லது அதற்கு பின்னிட்டோ தீர்ப்பு தேதி வரை தாவா சொத்து வாதிக்கு மட்டுமே உரிமை உள்ளது என்று உரிமை விளம்புகை பரிகாரம் எதுவும் வாதி வழக்குரையில் கோராததால் வாதியின் வழக்கு சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எனவே எழுவினா.3 வாதிக்கு எதிராக தீர்மானிக்கிறது.**

**<u>எழுவினா 4க்கான தீர்வு</u>**

| |
|---|
| 4. **வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் சொத்துவிபரம் மற்றும் விஸ்தீரணம் சரியானதா?** |

வாதி தாக்கல் செய்துள்ள சொத்து விபரம் மற்றும் அதன் விஸ்தீரணம் தவறானது என்று 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில், சொத்து மற்றும் வீஸ்தீரணம் எவ்வாறு தவறானது என்பதை பொறுத்து குறிப்பிட்டு கூறாமல் பொதுமான மறுப்பாகவே எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. சொத்து விபரம் மற்றும் விஸ்தீரணம் குறித்து ஆவண சாட்சியங்கள் மூலம் 1ம் பிரதிவாதி தரப்பில் மற்றும் பிற பிரதிவாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தின் முன்பு சட்டத்திற்குட்பட்டு முரண்படுத்தவில்லை மற்றும் வாதியை குறுக்கு விசாரணை செய்து சொத்து விபரம் மற்றும் விஸ்தீரணம் குறித்து வாதியின் வழக்கை சட்டப்படி முரண்படுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எனவே, எழுவினா 4க்கு வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கிறது.**

**<u>எழுவினா 5க்கான தீர்வு</u>**

| |
|---|
| **5. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்பது உண்மைதானா?** |

தாவா சொத்தை பொறுத்து, ஏற்கனவே நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 241/2004–ல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட 20.08.2003–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரமான இவ்வழக்கின் வா.சா.ஆ.1 ஆவணமானது சட்டப்படி செல்லதக்கதல்ல என்று ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, தீர்ப்பு

வழங்கப்பட்டுள்ளதாகவும், அதை எதிர்த்து வாதியின் தந்தை செய்த மேல்முறையீட்டு வழக்கு எண் AS.No.135/2007 வழக்கானது 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது என்று 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில், அந்த கூற்றை மறுத்து வாதி தன்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. General Deniel–ல் மட்டுமே வாதியால் செய்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதியின் இவ்வழக்கானது முன்தீர்ப்புத்தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்றாலும், விளம்புகை பரிகாரம் கோரியிருப்பதால், வாதி தன்னுடைய வழக்கை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் தன்னிச்சையாக நிரூபிக்க கடமைப்பட்டவராவார். 1ம் பிரதிவாதி ஏற்கனவே இந்த வழக்கில் சொல்லப்பட்ட 20.08.2003–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.1 குறித்து செல்லதக்கதல்ல என்று ஏற்கனவே, நிலக்கோட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 241/2004–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று 1ம் பிரதிவாதி கூறியுள்ளதை மறுத்து வாதி இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த வகையிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்து வாதியின் வழக்கை நிரூபிக்கவில்லை.

எனவே, ஏற்கனவே வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்று நிலக்கோட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 241/2004 வழக்கில் தீர்மானித்துள்ளதாலும், அதனை உறுதி செய்து AS.No.137/2007 வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், தாவா சொத்தின் உரிமை குறித்து ஏற்கனவே, தகுந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக எந்த மேல்முறையீடும் செய்து அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகளை ரத்து செய்யாத நிலையில், வாதிக்கு தாவா சொத்தில் உரிமைமூலம் இல்லை என்று

நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதற்கு மறுத்து எவ்வித முரண்பட்ட சாட்சியங்களும் அளிக்காத நிலையில், தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு வாதிக்கு வழக்குமூலம் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா.5–ஐ பொறுத்து வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>எழுவினா 6–க்கான தீர்வு</u>**

**6. தாவா தேதியில், தாவா சொத்தின் சட்டப்படியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும், வாதி இருந்து வருகிறார் என்பது உண்மைதானா?**

வாதி தாவா சொத்தில் அனுபவமும், சுவாதீனமும் பெற்றுள்ளார் என்பதை காட்டுவதற்கு அடங்கல் ஆவணமே சிறந்த ஆவணமாகும். தாவா சொத்தின் சுவாதீனத்தை நிரூபிக்க இவ்வழக்கிற்கு முன்பு உள்ள அடங்கல் ஆவணத்தையும், வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும், நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 241/2004 மற்றும் AS.No.135/2007 (DT.11.08.2010) தேதிக்கு பின்னிட்டு, இவ்வழக்கு சொத்தை பொறுத்து, 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் சட்டப்படி உரிமை உள்ளது என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால், 2ம் பிரதிவாதியிடம் 1ம் பிரதிவாதி மனு செய்து அதற்கு 2ம் பிரதிவாதி மேற்சொன்ன தீர்ப்பின் அடிப்படையில், வாதிக்கு தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதை ரத்து செய்து உத்தவிட்டுள்ளனர். அதேபோல், வாதிக்கு வழங்கிய மின் இணைப்பை 4ம் பிரதிவாதி ரத்து செய்து உத்தரவிட்டுள்ளனர். எனவே, தாவா சொத்தில் வாதிக்கு சட்டப்படியான உரிமைமூலம் இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததற்கு பின்னிட்டு, தாவா சொத்தின் சட்டப்படியான உரிமையாளருக்கு வரி ரசீது மற்றும் மின்கட்டண ரசீதுகளை மாற்றி கொடுக்க உத்தரவிட்டுள்ளது சட்டப்படி

சரியானதாகும். நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், வாதிக்கு வழங்கிய வருவாய் ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே, தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே வாதி சட்டமுரணாக பெற்ற மற்றும் உரிமைமூலமின்றி பெற்ற வருவாய் ஆவணங்களை வைத்து தாவா தேதியில், தாவா சொத்தின் சட்டப்படியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் வாதி இருந்து வந்துள்ளார் என்று தீர்மானிக்க இயலாது. வாதி தரப்பு ஆவணங்கள் மூலம் தாவா சொத்தின் வாதி சட்டப்படியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனமானது சட்டப்படியானது அல்ல என்று வா.சா.ஆ.3 மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் மூலம் வாதியின் வழக்கை சட்டப்படியாக முரண்படுத்தியுள்ளனர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, தாவா தேதியில், தாவா சொத்தில் வாதி சட்டப்படியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்தார் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து. **எழுவினா.6க்கு வாதிக்கு எதிராக தீர்மானிக்கிறது.**

**<u>எழுவினா 7க்கான தீர்வு</u>**

| |
|---|
| **7. வாதி இவ்வழக்கில் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதா?** |

எழுவினாக்கள்.3, 5, 6 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால், வாதி இவ்வழக்கில் கோரிய நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்று எழுவினா.7க்கு வாதிக்கு எதிராக தீமானிக்கிறது.

**<u>எழுவினா 8–க்கான தீர்வு</u>**

**8. வாதி இவ்வழக்கில் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கதக்கதா?**

வாதி இவ்வழக்கில் கோரிய விளம்புகை பரிகாரம் எழுவினாக்கள்.3,5,6,7 வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாலும், ஏற்கனவே வாதியின் தந்தை தொடர்ந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்று நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 241/2004 வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும், அந்த தீர்ப்பை AS.No.135/2007 வழக்கில் உறுதி செய்துள்ளதாலும், வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்க்கும்போது, பாவாயிஅம்மாள் **எனக்கு பாத்தியப்பட்ட ரூ.10,000 பெருமானமுள்ள சொத்துக்களை இன்று நான் தானசெட்டில்மெண்ட் மூலம் உனக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்று மட்டுமே கூறியுள்ளாரே தவிர இந்த தாவா சொத்தானது** எவ்வாறு பாவாயிஅம்மாளுக்கு கிடைத்தது என்று குறித்து குறிப்பிட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூறி தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாதிக்கு கொடுக்கவில்லை என்பதால், தாவா சொத்தை பொறுத்து பாவாயிஅம்மாளுக்கு எவ்வாறு உரிமைமூலம் வந்தது என்பது குறித்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்பதால், மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும், வா.சா.ஆ.1–ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, தாவா சொத்திற்கு **உங்கள் பாட்டி பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் உள்ளது என்று கூறியுள்ளார். தாவா சொத்து பாவாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டது** என்பதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாமலும் , பாவாயிஅம்மாளுக்கு எவ்வாறு தாவா சொத்தை பொறுத்து உரிமைமூலம் வந்தது என்று கூறாததாலும், தாவா சொத்திற்கு பாவாயிஅம்மாள் தான் உரிமையாளர் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்காத நிலையில், அதனை தொடர்ந்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல

என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் மட்டும் தான் 2ம் பிரதிவாதி, வாதி பெயரில் இருந்த வீட்டு வரி ரசீதை ரத்து செய்து 08.07.2019 அன்று வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. 2ம் பிரதிவாதியின் உத்தரவு சட்டத்திற்குட்பட்டு தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக 2ம் பிரதிவாதி உத்தரவு பிறப்பிக்கவில்லை. எனவே, வாதி 2-ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவை சட்டப்படி செல்லதக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரத்தை சட்டப்படி கேட்கமுடியாது என்றும் அத்தகைய பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எனவே, எழுவினா.8 க்கு வாதிக்கு எதிராக தீர்மானிக்கிறது.**

**எழுவினா 9-க்கான தீர்வு**

**9. வாதி இவ்வழக்கில் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு சட்டப்படி கிடைக்கதக்கதா?**

எழுவினாக்கள்.3,5,6,7 மற்றும் 8 வாதிக்கு எதிராக தீர்மானித்துள்ளதால், வாதி இவ்வழக்கில் கோரிய கடந்த 08.07.2019-ம் தேதி 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவினை வைத்து, 3ம் பிரதிவாதியால் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு வீட்டு வரி ரசீது எதுவும் ஏற்படுத்தக்கூடாது எனக்கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பினை முறையான விசாரணையின்றி , இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி துண்டிக்கக்கூடாது என செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும் கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே, தாவா சொத்து தொடர்பாக வாதி 3 மற்றும் 4–வது பிரதிவாதிகளுக்கு எதிராக கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும் கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, எழுவினா.9 வாதிக்கு எதிராக தீர்மானிக்கிறது.

**<u>எழுவினா 10க்கான தீர்வு</u>**

| |
|---|
| **10. இதர பரிகாரங்கள் யாவை?** |

இவ்வழக்கில் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இவ்வழக்கின் தன்மை கருதி, வாதி தரப்பு மற்ற சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை இவ்வழக்கின் தீர்வுக்கு விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

தாவா சொத்தை பொறுத்து வாதி 1ம் பிரதிவாதிக்கும் அவரது ஆட்களுக்கும் எதிராக கோரிய **நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம்** சட்டப்படியும், பொருண்மைப்படியும் **கிடைக்கதக்கதல்ல** என்றும்,

08.07.2019ம் தேதி 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவை சட்டப்படி செல்லதக்கதல்ல என்ற **விளம்புகை செய்யக்கோரிய பரிகார**ம் வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும் **கிடைக்கதக்கதல்ல** என்றும்,

கடந்த 08.07.2019ம் தேதி 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவினை வைத்து, 3ம் பிரதிவாதியால் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு வீட்டு வரி ரசீது எதுவும் ஏற்படுத்தக்கூடாது எனக்கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பினை முறையான விசாரணையின்றி இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி துண்டிக்கக்கூடாது என **செயலுறுத்துக்கட்டளை** பரிகாரமும், வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும்

**கிடைக்கதக்கதல்ல** என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து **வாதியால் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லி, கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:41:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.

**இணைப்பு:–**

**வாதி தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1 .. திரு. சண்முகராஜா(வாதி)
வா.சா.2 .. திரு. பரந்தாமன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.08.2003 | வாதியின் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட்டின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 30.03.2015 | வாதியின் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.3 | 08.07.2019 | 2ம் பிரதிவாதி வழங்கிய உத்தரவாணையின் அசல் |
| வா.சா.ஆ.4 | -- | வாதியின் பெயரில் உள்ள மின் கட்டண அட்டையின் அசல் |
| வா.சா.ஆ.5 | -- | கட்டிட வரைபடத்தின் அசல் |
| வா.சா.ஆ.6 | -- | வில்லங்கச்சான்றுகளின் அசல் |
| வா.சா.ஆ.7 | -- | வாதியின் குடும்பஅட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது புகைப்பட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:41:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.